# 11

# ஆபிரகாமின் அழைப்பு!

## (Patriarchs and Prophets, pp. 125–131)

பாபேலின் சிதறலுக்குப்பின்பு விக்கிரக ஆராதனை மீண்டும் உலகமுழுவதிலும் பரவியது. அப்போது ஆண்டவர், கடின இருதயங்கொண்ட கலகக்காரரை தங்கள் தீய வழிகளையே பின்பற்ற முடிவாக விட்டுவிட்டு, சேமின் வம்சத்தில் வந்த ஆபிரகாமை தெரிந்தெடுத்து, எதிர்காலத் தலைமுறையினருக்காக தமது கற்பனைகளைக் காத்துக்கொள்ளுபவனாக அவனை உண்டாக்கினார். ஆபிரகாம் மூடநம்பிக்கைகளுக்கும் அஞ்ஞான வழக்கங்களுக்கும் நடுவே வளர்ந்திருந்தான். யாரால் தேவனைக்குறித்த அறிவு பாதுகாக்கப்பட்டிருந்ததோ, அந்த—அவன் தகப்பனுடைய வீட்டாருங்கூட தங்களைச் சுற்றியிருந்த மயக்கும் செல்வாக்கிற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்து, யெகோவாவை விடுத்து, மற்ற தேவர்களை சேவித்திருந்தார்கள். என்றாலும், மெய்யான விசுவாசம் அழிந்துபோகக்கூடாது. தேவன் தம்மை சேவிக்கும்படியாக மீதியான ஒரு ஜனத்தை எப்போதும் பாதுகாத்திருக்கிறார். ஆதாம், சேத், ஏனோக்கு, மெத்துசலா, நோவா, சேம் ஆகியோர் முறிந்துபோகாத வரிசையில் அவருடைய சித்தத்தின் வெளிப்பாடுகளை காலங்காலமாக பாதுகாத்து வந்தனர். தேராகின் மகன் இந்த பரிசுத்த நம்பிக்கையை சுதந்தரிக்கிறவனானான். விக்கிரக வணக்கம் அவனை வீணாகவே எப்பக்கத்திலும் வரவேற்றது. விசுவாசமற்றவர்களின் நடுவே நிலவியிருந்த விசுவாசத் துரோகத்தினால் களங்கப்படாதவனாக, ஒன்றான மெய்தேவனை ஆராதிப்பதில் அவன் உறுதியாக நின்றிருந்தான். “தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்”—சங். 145:18. அவர் தமது சித்தத்தை ஆபிரகாமுக்கு தெரியப்படுத்தினார். மேலும் தமது பிரமாணங்களின் கோரிக்கைகளையும் கிறிஸ்துவின்மூலமாக நிறைவேற்றப்படவிருக்கிற இரட்சிப்பையுங்குறித்த குறிப்பான அறிவை அவனுக்குக் கொடுத்தார். (1)

ஆபிகாமுக்கு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. விசேஷமாக அந்தக்

காலத்து மக்களுக்கு மிகவும் பிரியமாயிருந்த “நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்” என்ற எண்ணுக்கடங்காத சந்ததியினரையும், தேசிய மேன்மையையுங்குறித்ததான வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. இதோடுகூட, விசுவாசத்தை சுதந்தரித்துக்கொண்ட அவனுக்கு, மற்ற எல்லாவற்றையும்விட விலைமதிப்புள்ளதாயிருந்த—உலகமீட்பர் அவனுடைய சந்ததியில் வரவேண்டும் என்கிற உறுதி: “பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” என்று கூட்டப்பட்டிருந்தது. என்றாலும் இதனுடைய நிறைவேறுதலின் முதல் நிபந்தனையாக ஒரு விசுவாச சோதனை இருக்கவேண்டும். ஒரு தியாகம் கோரப்பட்டது. (2)

“நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ” என்கிற தேவனுடைய செய்தி ஆபிரகாமுக்கு வந்தது. தேவன் அவனைத் தமது பரிசுத்த வாக்கியங்களின் பாதுகாவலனாக தம்முடைய மாபெரும் வேலைக்குத் தகுதிப்படுத்த, ஆபிரகாம் தன் இளமைகால தோழமைகளிலிருந்து கட்டாயம் பிரிக்கப்படவேண்டும். இனத்தார் மற்றும் தோழர்களின் செல்வாக்கு, தேவன் தமது ஊழியக்காரனுக்குக் கொடுக்க எண்ணியிருந்த பயிற்சியில் குறுக்கிடலாம். இப்போது ஆபிரகாம் ஒரு விசேஷமானவிதத்தில் பரலோகத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறான். அவன் அந்நியர்களின் நடுவே வசிக்கவேண்டும். அவனுடைய குணம் உலகம் முழுவதிலுமிருந்து வேறுபட்ட, அசாதாரணமானதாயிருக்கவேண்டும். நண்பர்கள் புரிந்துகொள்ளும்வண்ணம் தன் செயல்களை விளக்கிச் சொல்லகூட அவனால் முடியாது. ஆவிக்குரிய காரியங்கள் ஆவிக்குரியவிதமாக ஆராய்ந்து நிதானிக்கப்படும். அவனுடைய நோக்கங்களும் செயல்களும் விக்கிரக ஆராதனைக்காரரான அவனுடைய இனத்தாரால் புரிந்துகொள்ளப்படவில்லை. (3)

“விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்”—எபி. 11:8 ஆபிரகாமின் கேள்விகேட்காத கீழ்ப்படிதல், வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிற விசுவாசத்திற்கடுத்த மிக வல்லமையான சான்றுகளில் ஒன்றாக இருக்கிறது. அவனுக்கு விசுவாசம் என்பது: “நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாய்” (எபி. 11:1) இருந்தது. தெய்வீக வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கான மிகக்குறைவான நிச்சயங்கூட இல்லாதபோதும் அதையே சார்ந்து, வீட்டையும் இனத்தையும் தேசத்தையும்

துறந்து, தேவன் எங்கே நடத்துகிறாரோ அங்கே போகும்படி, போகும் இடம் இன்னதென்று அறியாதபோதும் சென்றான். “விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்”—எபி. 11:9. (4)

இவ்விதமாக ஆபிரகாமின்மேல் கொண்டுவரப்பட்டது எளிமையான சோதனை அல்ல. அவனிடம் குறைவான தியாகம் கோரப்படவில்லை. தன்னுடைய இனத்தோடும் தேசத்தோடும் குடும்பத்தோடும் அவனைக் கட்டிவைக்கிற பலமான உறவுகள் அங்கே இருந்தன. என்றாலும் அழைப்பிற்குக் கீழ்ப்படிய அவன் தயங்கவில்லை. அதன் மண் செழிப்பானதா, தட்பவெப்பம் ஆரோக்கியமானதா, மனதுக்கு உகந்த சூழலையும் செல்வம் சேர்ப்பதற்கான சந்தர்ப்பங்களையும் அந்த நாடு கொடுக்குமா?—என்று வாக்குத்தத்த நாட்டைக்குறித்து கேட்கும்படியான எந்த கேள்வியும் அவனிடம் இல்லை. தேவன் பேசியிருக்கிறார். அவருடைய ஊழியக்காரன் கீழ்ப்படியவே வேண்டும்; பூமியிலே அவனுக்கு மிக மகிழ்ச்சியான இடம், அவன் எங்கே இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அதுதான். (5)

அநேகர் இன்றும் ஆபிரகாமைப்போல சோதிக்கப்படுகிறார்கள். பரலோகங்களிலிருந்து நேரடியாக தேவன் பேசுகிற சத்தத்தை அவர்கள் கேட்பதில்லை. ஆனால் தமது வார்த்தைகளின் போதனைகளினாலும் தாம் ஏற்பாடுசெய்கிற சம்பவங்களினாலும் அவர்களை அவர் அழைக்கிறார். செல்வத்தையும் புகழையும் வாக்குப்பண்ணுகிற தொழிலைவிட்டுவிட, இன்பமான மற்றும் இலாபமான தோழமைகளைவிட்டுவிட்டு இனத்தாரிடமிருந்து பிரியும்படி, சுயமறுப்பும் இன்னல்களும் தியாகமும் மாத்திரமே கொண்ட பாதையாகத் தோன்றுவதில் நுழைய அவர்கள் அழைக்கப்படலாம். செய்யும்படியான வேலை ஒன்றை தேவன் அவர்களுக்கு வைத்திருக்கிறார். தொல்லையில்லாத வாழ்க்கையும், நண்பர்கள் மற்றும் இனத்தாரின் செல்வாக்கும் அவ்வேலையை நிறைவேற்ற அவசியமான பண்புகளை விருத்திசெய்ய தடை செய்யலாம். மனித செல்வாக்குகளிலிருந்தும் உதவிகளிலிருந்தும் அவர்களை அப்பால் அழைத்து, தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கேதுவாக, தமது உதவியின் அவசியத்தை உணந்து, தம்மை மாத்திரம் சார்ந்து இருக்கும்படி அவர் நடத்துகிறார். தேவனுடைய அழைப்பிற்கு, நேசித்திருந்த திட்டங்களையும் பழக்கப்பட்ட தோழமைகளையும் விட்டுவிட யார் ஆயத்தமாக இருக்கிறீர்கள்? கிறிஸ்துவிற்காக தன்னுடைய நஷ்டங்களை இலாபமாக எண்ணி, உறுதியோடும் முழு மனதோடும்

தேவனுடைய வேலையைச் செய்துகொண்டு, யார் புதிய கடமைகளை ஏற்று நுழைந்திராத இடங்களில் நுழைவீர்கள்? (6)

இப்படிச்செய்கிறவன் ஆபிரகாமின் விசுவாசத்தைக் கொண்டிருக்கிறான். அவன், இவ்வுலகத்துப் பாடுகள் ஒப்பிடத்தகாத "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை" அவனோடு பகிர்ந்துகொள்வான். (ரோமர் 8:18; 2 கொரி. 4:17). (7)

"கல்தேயருடைய பட்டணமான ஊர்" என்னும் தேசத்திலே ஆபிரகாம் சஞ்சரித்தபோது, பரலோக அழைப்பு முதன்முறையாக அவனுக்கு வந்தது. அதற்குக் கீழ்ப்படிந்து அவன் ஆரானுக்குச் சென்றான். அவனுடைய தகப்பன் குடும்பத்தார், விக்கிரக ஆராதனையோடு மெய்யான தேவனைத் தொழுவதையும் இணைத்திருந்ததால், இந்த இடம்வரையிலும் அவனோடு சென்றார்கள். இங்கே ஆபிரகாம் தேராகு மரணமடயும்வரை தங்கியிருந்தான். ஆனால் அவனுடைய தகப்பனின் மரணத்திற்குப்பின், தெய்வீகக்குரல் முன்னோக்கிச்செல்லும்படி அவனைப் பணித்தது. அவனுடைய சகோதரனான நாகோர் தன் குடும்பத்தாரோடுகூட தங்கள் வீட்டையும் தங்கள் விக்கிரகங்களையும் பற்றிக்கொண்டிருந்தனர். ஆபிரகாமின் மனைவி சாராளைத்தவிர வெகுகாலத்துக்குமுன் மரித்துப்போன ஆரானின் மகன் லோத்து மாத்திரமே முற்பிதாவின் யாத்ரீக வாழ்க்கையில் பங்குபெற தெரிந்துகொண்டான். என்றபோதும், மெசபத்தோமியாவிலிருந்து மிகப்பெரிய கூட்டம் புறப்பட்டது. ஆபிரகாம் ஏற்கனவே அதிகமான மந்தைகளையும் கிழக்கத்திய ஐசுவரியங்களையும் கொண்டிருந்நான். அதிக எண்ணிக்கையிலான வேலைக்காரராலும் சேவகர்களாலும் அவன் சூழப்பட்டிருந்தான். அவன் தன் தகப்பன்மார்களுடைய தேசத்திலிருந்து ஒருபோதும் திரும்பிவராதபடி புறப்படுகிறான். தனக்கு உண்டாயிருந்த அனைத்தையும் "தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சவதரித்திருந்த ஜனங்களையும்" அவன் தன்னோடு எடுத்துக்கொண்டான். ஊழியம் மற்றும் சுயவிருப்பத்தினால் வந்தவர்களைவிடவும், மேலான எண்ணங்களினால் நடத்தப்பட்டிருந்த அநேகர் அவர்களில் இருந்தனர். அவர்கள் ஆரானில் தங்கியிருந்தபோது ஆபிரகாமும் சாராளும் மெய்யான தேவனை தொழுது சேவிக்கும்படி மற்றவர்களை நடத்தியிருந்தனர். அவர்கள் முற்பிதாவின் வீட்டாரோடு தங்களை இணைத்திருந்து, வாக்குத்தத்தமான நாட்டுக்கு அவனோடு சென்றனர். "அவர்கள் கானான் தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், கானான் தேசத்தில் சேர்ந்தார்கள்." (8)

அவர்கள் முதலாவது சீகேம் என்ற இடத்தில் தங்கினார்கள். பரந்த புல்வெளியில், ஒலிவ தோப்புகளும் பாய்ந்துவரும் ஊற்றுகளுங்கொண்ட

மோரேயின் கர்வாலி மரங்களின் நிழலில், ஏபால் மலை ஒருபுறமும் கெரிசீம் மலை மறுபுறமுமிருக்க, அவைகளுக்கிடையே ஆபிரகாம் கூடாரம் போட்டான். முற்பிதா பிரவேசித்திருந்தது அழகானதும் நன்மையானதுமான தேசம். “அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம்; அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச்செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம், அது ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம்”–உபா. 8:7,8. ஆனால் மரங்கள்கொண்ட மலையிலும் செழிப்பான சமபூமியிலும் யெகோவாவை தொழுதுகொண்டிருந்தவன்மேல் ஒரு பாரமான நிழல் தங்கியது. “அக்காலத்திலே கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள்.” அன்னிய இனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு, உருவ வழிபாடு பரவியிருந்த ஒரு தேசத்தைக் கண்டுபிடிக்கவே ஆபிரகாம் தனது நம்பிக்கைகளின் குறிக்கோளை எட்டினான். தோப்புகளில் பொய்தேவர்களின் பலிபீடங்கள் நிறுவப்பட்ருந்தன. அடுத்தடுத்த மேடுகளில் மனித பலிகள் கொடுக்கப்பட்டிருந்தன. தெய்வீக வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டிருந்தபோதும், துன்பம் நிறைந்த எச்சரிக்கை இல்லாமல் அவன் தமது கூடாரத்தைப் போடவில்லை. பின்னர், “கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்” என்றார். இந்த வாக்குறுதியினால், தெய்வீக சமூகம் தன்னோடு இருக்கிறது என்றும் துன்மார்க்கரின் விருப்பத்துக்கு தான் விட்டுவிடப்படவில்லை என்றும் அவனுடைய விசுவாசம் உறுதிப்படுத்தப்பட்டது. “அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.” இன்னும் வழிப்பிரயாணியாக இருந்த அவன், பெத்தேலுக்கு சமீபமான ஒரு இடத்துக்குச் சென்று, மீண்டும் ஒரு பலிபீடத்தைக்கட்டி, கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டான். (9)

“தேவனுடைய சிநேகிதனாயிருந்த” ஆபிரகாம் நமக்குத் தகுதியான ஒரு உதாரணத்தை நிறுவினான். அவனுடையது ஒரு ஜெபவாழ்க்கை! எங்கெல்லாம் அவன் கூடாரத்தைப் போட்டானோ, அதற்கு மிக அருகிலே தன் பாளையத்திற்குள் இருக்கும் அனைவரையும் காலை மாலை பலிக்கு அழைக்கிற அவனுடைய பலிபீடமும் நிறுவப்பட்டது. அவனுடைய கூடாரம் பெயர்க்கப்பட்டபோதும் பலிபீடம் அங்கே தங்கியிருந்தது. பின்வந்த வருடங்களில், திரிந்துகொண்டிருந்த கானானியர்களில் ஆபிரகாமிடமிருந்து போதனைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் அங்கே இருந்தார்கள். அவர்களில் ஒருவர் எப்போதாகிலும் அந்த பலிபீடங்களுக்கருகில் வரும்போது, தனக்குமுன்பு அங்கே யார் இருந்தார்கள் என்பதை அறிந்து, தன்னுடைய கூடாரத்தைப்போடும்போது பலிபீடத்தையும் செப்பனிட்டு, அங்கே ஜீவனுள்ள தேவனைத் தொழுதுகொள்வான். (10)

ஆபிரகாம் தென்திசைநோக்கி தன் பிரயாணத்தைத் தொடர்ந்தான். மீண்டும் அவனுடைய விசுவாசம் சோதிக்கப்பட்டது. வானங்கள் மழை பொழியவில்லை; சமபூமியிலிருந்த புற்கள் காய்ந்துபோயின; மந்தைகளுக்கு புல்வெளி இல்லாதுபோய் முழு பாளயத்தையும் பஞ்சம் பயமுறுத்தியது. தேவனுடைய நடத்துதல்களை இப்போது அந்த முற்பிதா கேள்விகேட்கவில்லையா? கல்தேய சமபூமிகளின் ஏராளத்தை அவன் ஏக்கத்தோடு திரும்பிப்பார்க்கவில்லையா? துன்பத்தின்மேல் துன்பம் வந்தபோது, ஆபிரகாம் என்ன செய்வான் என்று அனைவரும் அவனை ஆவலோடு கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவனுடைய நம்பிக்கை அசையாததுபோலத் தோன்றியவரையிலும் அங்கே நம்பிக்கை இருப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள். தேவன் அவனுடைய நண்பர் என்பதிலும், அவர் அவனை இன்னமும் நடத்துகிறார் என்பதிலும் அவர்கள் உறுதியாயிருந்தார்கள். (11)

தேவனுடைய நடத்துதல்களை ஆபிரகாமால் விளக்கிக்கூற முடியவில்லை. தான் எதிர்பார்த்தவைகளை உணர்ந்திராதபோதும், "உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" என்கிற வாக்குத்தத்தத்தை அவன் உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தான். ஊக்கமான ஜெபத்தோடு, தன்னுடைய ஜனத்தையும் மந்தைகளையும் எவ்வாறு பாதுகாப்பது என்று யோசித்தான். ஆனாலும் தேவனுடைய வார்த்தையின் மேலிருக்கும் தனது விசுவாசத்தை அசைக்க சூழ்நிலைகளை அவன் அனுமதிக்கமாட்டான். பஞ்சத்துக்குத் தப்பும்படியாக அவன் எகிப்துக்குப் போனான். அவன் கானானை கைவிடவில்லை; அல்லது, தன்னுடைய நெருக்கடியான நேரத்தில் தான் விட்டுவந்த அப்பம் தாழ்ச்சியடையாத கல்தேய நாட்டிற்குத் திரும்பவில்லை. மாறாக, தேவன் தன்னை வைத்த இடத்திற்கு தீவிரமாகத் திரும்பிவரும் எண்ணத்தோடு, வாக்குத்தத்த நாட்டிற்கு வெகு அருகாமையிலிருந்த இடத்தில் தற்காலிக அடைக்கலம் தேடினான். (12)

ஒப்புக்கொடுத்தல், பொறுமை, விசுவாசம் குறித்த பாடங்களை— பின்நாட்களில் துன்பத்தை சகிக்க அழைக்கப்படும் அனைவருக்கும் நன்மைபயப்பதற்கேதுவாக பதிவுகளில் வைக்கப்படவேண்டிய பாடங்களை ஆபிரகாமுக்கு கொடுக்கவே ஆண்டவர் தமது ஏற்பாட்டில் இந்தச் சோதனையை அவனுக்குக் கொண்டுவந்தார். தேவன் தமது பிள்ளைகளை அவர்கள் அறியாத பாதையில் நடத்திவருகிறார். ஆனாலும் அவர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களை அவர் மறப்பதோ அல்லது எறிந்துவிடுவதோ இல்லை. யோபின்மேல் உபத்திரவம் வரும்படி அவர்

அனுமதித்தார். ஆனால் அவனை விட்டுவிடவில்லை. அன்பான யோவான் பத்மு தீவிற்கு நாடுகடத்தப்படும்படி அனுமதித்தார். ஆனால் தேவகுமாரன் அங்கு அவனை சந்தித்தார். அவனுடைய தரிசனங்கள் நித்திய மகிமைக் காட்சிகளால் நிறைந்திருந்தது. தங்கள் உறுதியாலும் கீழ்ப்படிதலாலும் அவர்கள்தாமே ஆவிக்குரிய விதத்தில் ஐசுவரியமடையவும், அவர்களுடைய உதாரணம் மற்றவர்களுக்கு பெலத்தின் ஆதாரமாயிருப்பதற்குமே தமது பிள்ளைகளை சோதனைகள் தாக்குவதற்கு தேவன் அனுமதிக்கிறார். “நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே”—எரே. 29:11. நம்முடைய விசுவாசத்தை மிக மோசமாக்கி தேவன் நம்மைக் கைவிட்டார் என்று தோன்றச்செய்கிற அதே சோதனைகள்தான், நம்முடைய அனைத்து பாரங்களையும் அவருடைய பாதத்தில் வைத்து, அதற்கு மாற்றாக அவர் தருகிற சமாதானத்தை அனுபவிக்கும்படி நம்மை கிறிஸ்துவுக்கு மிக நெருக்கமாகக் கொண்டுவரவேண்டியவைகள். (13)

தேவன் எப்போதுமே தமது மக்களை உபத்திரவத்தின் சூளையிலே சோதித்திருக்கிறார். சூளையின் வெப்பத்தில்தான் கிறிஸ்தவ குணமாகிய மெய்யான பொன்னிலிருந்து களிம்பு பிரிக்கப்படுகிறது. இயேசு சோதனையை கவனித்துக்கொண்டிருக்கிறார். அவருடைய அன்பின் கதிர்களை பிரதிபலிக்கும்படியாக, விலையேறப்பெற்ற உலோகத்தைச் சுத்திகரிக்கிறதற்கு எனன தேவை என்பதை அவர் அறிவார். நெருக்கமான, பரீட்சிக்கும் சோதனைகளில்தான் தேவன் தமது ஊழியக்காரரை ஒழுங்குபடுத்துகிறார். தமது வேலையை முன்கொண்டுசெல்வதற்கு உபயோகப்படக்கூடிய வல்லமைகள் சிலரில் இருப்பதை அவர் காண்கிறார். இவர்களை அவர் சோதனைக்குட்படுத்துகிறார். அவர்களுடைய குணங்களை சோதித்து, தங்களுடைய சொந்த அறிவுக்கு மறைந்திருந்த குறைகளையும் பெலவீனங்களையும் வெளிப்படுத்தும் நிலைகளில் அவர்களை அவர் கொண்டுவருகிறார். இந்தக் குறைகளை சரிசெய்து, அவருடைய வேலையில் தங்களைப் பொருத்திக்கொள்ளும் சந்தர்ப்பங்களை அவர் அவர்களுக்குக் கொடுக்கிறார். அவர்களுடைய சொந்த பெலவீனங்களை அவர்களுக்குக் காட்டி, தம்மீது சாய்ந்துகொள்ள கற்பிக்கிறார். ஏனெனில் அவரே அவர்களுடைய ஒரே உதவியும் பாதுகாவலருமாம். இவ்வாறு அவருடைய நோக்கம் எட்டப்படுகிறது. அவர்கள் கற்பிக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு, எதற்காக அவர்களுடைய வல்லமைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதோ, அந்த பிரம்மாண்டமான நோக்கத்தை நிறைவேற்ற ஆயத்தப்படுத்தப்படுகிறார்கள். செயல்படும்படி தேவன் அவர்களை அழைக்கும்போது, அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

பூமியின்மேல் நிறைவேற்றப்படவேண்டிய வேலையில் பரலோகத் தூதர்கள் அவர்களோடு இணைந்துகொள்ள முடியும். (14)

எகிப்தில் தங்கியிருந்தபோது, மனித பெலவீனங்களுக்கும் குறைகளுக்கும் தான் அப்பாற்பட்டவனல்ல என்கிற சான்றை ஆபிரகாம் கொடுத்தான். சாராள் தன்னுடைய மனைவி என்கிற உண்மையை மறைத்ததினால், தெய்வீக கவனிப்பின்மேலிருந்த அவநம்பிக்கையையும், அவனுடைய வாழ்க்கையிலே பலவேளைகளின் நேர்மையாக நிரூபிக்கப்பட்டிருந்த உயர்ந்த விசுவாசமும் தைரியமும் குறைவுபட்டிருந்ததையும் அவன் காட்டினான். சாராள் பார்வைக்கு அழகுள்ளவளாயிருந்தாள். எனவே நிறங்குறைந்த எகிப்தியர்கள் அழகான அந்நிய ஸ்திரீயை இச்சித்து, அவளை அடைவதற்காக அவளுடைய கணவனை கொல்லவும் தயங்கமாட்டார்கள் என்பதைக்குறித்து அவன் சந்தேகத்தோடு இருக்கவில்லை. சாராளை தன் சகோதரி என்று காட்டுவதினால் பொய்யைக்குறித்த குற்றவாளியாய் இருக்கமாட்டான். ஏனெனில் அவள் தன் தாயின் குமாரத்தியாக இல்லாவிடினும் தன் தகப்பனுக்கு குமாரத்தியாயிருந்தாள் என்று காரணப்படுத்தினான். ஆனால் அவர்களுக்கிடையே இருந்த மெய்யான உறவை மறைத்தது ஒரு வஞ்சகமே. கடினமான நேர்மையிலிருந்து விலகும் எதுவும் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறமுடியாது. ஆபிரகாமுடைய விசுவாசக்குறைவினால் சாராள் மாபெரும் ஆபத்தில் வைக்கப்பட்டாள். எகிப்தின் இராஜா அவளுடைய அழகைக்குறித்து கேள்விப்பட்டு, அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொள்ள தன் அரண்மனைக்கு வரவழைத்தான். ஆனால் ஆண்டவர் தமது மிகுந்த கிருபையினால் அரச வீட்டார்மேல் நியாயத்தீர்ப்புகளை அனுப்பி, சாராளை பாதுகாத்தார். இவ்விதமாக அந்த அரசன் அதிலிருந்த உண்மையை அறிந்து, தன்முன் காட்டப்பட்ட ஏமாற்றினால் கோபமடைந்து, "நீ எனக்கு ஏன் இப்படிச் செய்தாய்?... இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமற்போனதென்ன? இவளை உன் சகோதரி என்று நீ சொல்லவேண்டுவது என்ன? இவளை நான் எனக்கு மனைவியாகக்கொண்டிருப்பேனே; இதோ உன் மனைவி; இவளை அழைத்துக்கொண்டுபோ" என்று ஆபிரகாமைக் கடிந்துகொண்டு, அவனுடைய மனைவியை அவனிடம் திரும்ப அனுப்பினான். (15)

ஆபிரகாம் இராஜாவினால் மிகுந்த தயை பெற்றான். இப்போது பார்வோனே அவனுக்காகிலும் அவன் கூட்டததிற்காகிலும் எந்த பாதிப்பையும் அனுமதிக்காமல், தன்னுடைய எல்லைக்கு வெளியே அவனை பத்திரமாக விட்டுவர காவலாளர்களுக்குக் கட்டளையிட்டான். இந்த நேரத்திலே,

எகிப்தியர்கள் வெளிநாட்டு மேய்ப்பர்களுடன் உண்டு குடிப்பதுபோன்ற எவ்வித பழக்கத்தையும் உறவையும் ஏற்படுத்துகிறதை தடைசெய்யும் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆபிரகாமை பார்வோன் நீக்கியது, மிகுந்த தயவும் தாராளமுமானதாயிருந்தது. ஆனால் அவன் தங்கியிருப்பதை அனுமதிக்க தைரியமற்றவனாக, எகிப்தை விட்டுச்செல்லும்படி கேட்டுக்கொண்டான். அவன் அறியாமலேயே அவனுக்கு மிக மோசமான காயத்தை ஏற்படுத்தவிருந்தான். ஆனால் தேவன் தலையிட்டு, அவ்வளவு பெரிய பாவம் செய்வதிலிருந்து அரசனை காத்தார். இந்த அந்நியனில் பரலோகத்தின் தேவன் கனப்படுத்துகிற ஒருவனை பார்வோன் கண்டு, சந்தேகத்திற்கிடமின்றி தெய்வீக தயவில் இருக்கிற ஒருவனை தனது இராஜ்யத்தில் வைத்திருக்கப் பயந்தான். ஆபிரகாம் எகிப்தில் இருப்பானானால் வளருகிற அவனுடைய செல்வமும் புகழும் எகிப்தியர்களின் பொறாமையையும் இச்சையையும் தூண்டிவிட்டு, அவனுக்கு ஏதாகிலும் காயமேற்படுத்திவிடும். அதற்கு அரசனே பொறுப்பாளியாயிருப்பான். அது மீண்டும் அரச குடும்பத்திற்குள் நியாயத்தீர்ப்புகளைக் கொண்டுவரும். (16)

பார்வோனுக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிப்பு அஞ்ஞானிகளோடு பின்நாட்களில் இடைபடுவதில் ஆபிரகாமுக்கு ஒரு பாதுகாப்பாக இருந்தது. அது மறைக்கக்கூடாததாக, ஆபிரகாம் ஆராதித்துவந்த தேவன் தமது ஊழியக்காரனை பாதுகாப்பார் என்பதும், அவனுக்கு இழைக்கப்படும் தீங்கு பழிவாங்கப்படும் என்பதும் காணப்பட்டது. பரலோக தேவனுடைய பிள்ளைகளில் ஒருவருக்கு தீமை செய்வது ஆபத்தானது; தெரிந்துகொள்ளப் பட்டவர்களைக்குறித்தும் பேசும்போது, “அவர்களை ஒடுக்கும்படி ஒருவருக்கும் இடங்கொடாமல், அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்து கொண்டு: நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள் என்றார்” (சங். 105:14,15) என்று ஆபிரகாமுடைய அனுபவத்தையே சங்கீதக்காரன் குறிப்பிடுகிறான். (17)

எகிப்தில் ஆபிரகாமின் அனுபவத்திற்கும் நூற்றாண்டுகள் கழித்து அவனுடைய வம்சத்தாரின் அனுபவத்திற்குமிடையே ஆர்வமூட்டும் ஒற்றுமை இருக்கிறது. இருவரும் பஞ்சத்தினிமித்தம் எகிப்துக்குப் போனார்கள். அங்கே தங்கினார்கள். அவர்கள்நிமித்தம் காட்டப்பட்ட தெய்வீக நியாயத் தீர்ப்புகளினால் எகிப்தியர்மேல் அவர்களைக்குறித்த பயம் விழுந்தது. அஞ்ஞானிகளின் பரிசுகளினால் செல்வந்தர்களாகி, மிகுந்த பொருட்களோடு அங்கிருந்து வெளியேறினார்கள். ★